**Press Note -22.10.2021**

A case in Salem V&AC Cr.No.17/AC/2021 u/s 13(2) r/w 13(1)(e) of PC Act 1988, 13 (2) r/w 13 (1) (b) of the PC Act 1988 as amended in 2018, 109 IPC r/w 13 (2) r/w 13 (1) (e) PC Act 1988 and 12 r/w 13 (2) r/w 13 (1) (b) of PC Act 1988 as amended in 2018 was registered on 21.10.2021 against Tr.R.Elangovan, President of Salem District Central Co-Operative Bank, Salem / Chairman of Tamil Nadu State Apex Co-op Bank, Chennai and his son Tr.E.Praveenkumar, Vice Chairman of Swami Ayyappan Educational Trust into the allegation of possession of assets disproportionate to their known sources of income and intentionally enriched themselves during period between 01.04.2014 and 31.03.2020. During the investigation, today on 22.10.2021, house searches were conducted in 36 places including 3 places in Chennai, 1 place in Coimbatore, 3 Places in Namakkal, 6 Places in Musiri (Trichy) and 23 places in Salem. The search places includes the houses of Tr.R.Elangovan and Tr.E.Praveen Kumar, residences of their relatives and their close associates who are suspected to have been in possession of assets on behalf of them, the business firms and Jewellery shops of their relatives and friends and also Colleges / Institutions being run by Swamy Ayyappan Educational Trust, Musiri. During the search proceedings, net cash of Rs.29.77 Lakhs, 10 luxury cars (including one Cooper car and Audi car), 2 Volvo Buses, 3 computer hard discs, 21.2 Kgs (2650 Sovereign) of Gold jewels, 282.383 Kgs of silver articles, Bank Passbooks, Property documents and bank deposits Rs.68 Lakhs were identified and the cash and documents relevant to the case were seized. The search process continues.

<u>பத்திரிக்கை செய்தி, நாள்: 22.10.2021</u>

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் தலைவர் மற்றும் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர்.இளங்கோவன் மற்றும் சுவாமி அய்யப்பன் கல்வி அறக்கட்டளை நிறுவனத்தின் துணைத்தலைவரும் திரு.ஆர்.இளங்கோவன் அவர்களுடைய மகன் திரு.இ. பிரவீன்குமார் ஆகியோர்கள் அவர்களுடைய பெயரிலும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் பெயரிலும் மற்றும் தான் பங்குதாரர்களாக உள்ள நிறுவனங்கள் பெயரிலும் திரு.ஆர்.இளங்கோவன் அவர்கள் தனது பணிக்காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சொத்துக்கள் சேர்த்துள்ளது சம்மந்தமாக அவர் மீது கடந்த 21.10.2021 ம் தேதியன்று சேலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் குற்ற எண்.17/AC/2021 u/s 13(2) r/w 13(1)(e) of PC Act 1988, 13 (2) r/w 13 (1) (b) of the PC Act 1988 as amended in 2018, 109 IPC r/w 13 (2) r/w 13 (1) (e) PC Act 1988 and 12 r/w 13 (2) r/w 13 (1) (b) of PC Act 1988 as amended in 2018- ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது. விசாரணையின்போது, இன்று 22.10.2021 ம் தேதி சென்னையில் – 3 இடங்கள், கோவையில் – 1 இடம், நாமக்கல் – 3 இடங்கள், திருச்சி மாவட்டம், முசிறி – 6 இடங்கள் மற்றும் சேலம் – 23 இடங்கள் ஆக மொத்தம் 36 இடங்களில் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. அந்த சோதனைகளில் திரு.ஆர்.இளங்கோவன் மற்றும் திரு.இ.பிரவீன்குமார் ஆகியோர்களின் வீடுகள், அவர்கள் சார்பாக சொத்துக்கள் சேர்த்திருக்க கூடும் என்று சந்தேகப்படக்கூடிய உறவினர்கள் மற்றும் நெருங்கிய தொடர்புடையவர்களின் இருப்பிடங்கள், அவர்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வியாபார நிறுவனங்கள் மற்றும் நகைக்கடைகள் மற்றும் திருச்சி மாவட்டம் முசிறியில் சுவாமி அய்யப்பன் கல்வி அறக்கட்டளை மூலம் செயல்படும் கல்வி நிறுவனங்கள் ஆகியவை அடங்கும். மேற்படி சோதனைகளில் பணம் ரூ.29.77 லட்சங்கள், 10 – சொகுசு கார்கள், 2 – வால்வோ சொகுசு பேருந்துகள், 3 கணினி ஹார்டு டிஸ்க்குகள், சொத்துக்கள் சம்மந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள், 21.2 கிலோ கிராம் (2650 சவரன்) தங்க நகைகள், 282 கிலோ கிராம் வெள்ளி பொருட்கள் மற்றும் வங்கி கணக்கு புத்தகங்கள் மற்றும் வங்கி வைப்புத்தொகை ரூ.68 லட்சம் ஆகியவை கண்டறியப்பட்டு, வழக்கிற்கு தொடர்புடைய பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.